தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 27

2011 செப்டம்பர் 13, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

கருத்துகளை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக்கூடிய சிறந்த சொல்வன்மை செயல்மிக்கவர் கூறும் தொழிலை விரைவாகச் செய்ய உலகமே காத்துக்கொண்டிருக்கும்.

(*திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.*)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

கட்டட வசதி

***1749—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, பருதிபுரம் ஊராட்சி, பெரிய நொளம்பை கிராமத்தில் புதிய நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

செஞ்சி தொகுதி, பருதிபுரம் ஊராட்சி, பெரிய நொளம்பை கிராமத்தில் நியாய விலைக் கடை, 453 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

105—

இருவழிச் சாலை

***974—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையிலிருந்து சண்முகபுரம், மகாதேவன்குளம், சுவிசேசபுரம் வழியாக இட்டமொழி வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திசையன்விளையிலிருந்து சண்முகபுரம், மகாதேவன்குளம், சுவிசேசபுரம் வழியாக இட்டமொழி வரை செல்லும் சாலை